[திரு. அ. சௌந்தரபாண்டியன்] [2023 அக்டோபர் 10

2023–2024 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து எட்டாவது முதல் எண்பத்து ஐந்தாவது வரையிலான 18 அறிக்கைகளைப் பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவராக என்னை நியமனம் செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவினுடைய எட்டாவது மற்றும் ஒன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராக என்னை நியமனம் செய்த மக்களின் முதல்வர், பொற்கால ஆட்சியின் முதல்வர், எங்கள் மகளிரின் அன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சிரம் தாழ்ந்த நன்றியையும், வணக்கத்தையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.